<u>சுருக்கம்</u>

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – தேனி மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான அலுவலக உதவியாளர் திரு.மு.சுந்தரமூர்த்தி என்பவரின் மகன் திரு.சு.முத்துவேலவர், இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை

அரசாணை (4ப) எண்.43

நாள்: 21.07.2020
சார்வரி, ஆடி, 06
திருவள்ளுவர் ஆண்டு– 2051

படிக்கப்பட்டவை:

1. தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறை எண்.9210/2018/ஊ.வ.1, நாள் 29.11.2018.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், கடிதம் எண்.55510/2019/டி3, நாள் 29.01.2020.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யு1) துறை, நாள் 23.01.2020.

*****

<u>ஆணை:</u>

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், க.மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து 18.09.2017 அன்று பணியிடைக்காலமான திரு.மு.சுந்தரமூர்த்தி என்பவரின் வாரிசுதாரராகிய மகன் திரு.சு.முத்துவேலவர் என்பவருக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், தேனி மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 05.12.2018 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருகிறார். மறைந்த அலுவலக உதவியாளர் தகுதிகாண் பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.சு.முத்துவேலவர் என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 15.03.2018 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 30.05.1996 என்றும், அலுவலக உதவியாளர் இறந்த நாளில் தனியரின் வயது 21 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 22 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்து, தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 05.12.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்யக்கோரி மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

..2

2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை நாள் 01.08.2018-ல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணி வரன்முறை குறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. இந்நிலையில் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துரு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.சு.முத்துவேலவர் என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 05.12.2018 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் அவற்றைப் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 12.06.2020 ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.6646/க்யூ-1/2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சாரா எண்.14474/ஜி2/2020, நாள் 16.06.2020-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை - 18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், தேனி மாவட்டம்.

நகல்:
திரு.சு.முத்துவேலவர்,
இளநிலை உதவியாளர், ஊரக வளர்ச்சிப் பிரிவு,
தேனி மாவட்டம்.
(வழி: தேனி மாவட்ட ஆட்சித் தலைவர்.)
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை-9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை , சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்